# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 116 /பேரூ/2024**
**நாள் : 12.05.2025**

திரு. R.R. ஹரிகுமார்,
பளுகல்,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பளுகல் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி, மணிவிளை அஞ்சல், 1/36, மயூரம் புரவூர் என்ற முகவரியை சேர்ந்த திரு. R.R. ஹரிகுமார் என்பவரது 13.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2024 அன்று பெறப்பட்டு, 116/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் பேரூராட்சி, மணிவிளை அஞ்சல், 1/36, மயூரம் புரவூர் என்ற முகவரியை சேர்ந்த திரு. R.R. ஹரிகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 13.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“பளுகல் பேரூராட்சிக்கு சொந்தமான ஆலத்துவிளை புறம்போக்கு நிலத்தில் நன்றாக நின்ற பலாமரம் சுமார் ரு.2 ½ இலட்சம் பெறுமான மரத்தை தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாமனார் போஸ் என்பவருக்காக சேர்ந்து வெட்டி கடத்தியுள்ளதாக தெரிகிறது. அதை மீட்டு பேரூராட்சியில் ஒப்படைக்குமாறும், பேரூராட்சி மன்ற அனுமதியில்லாமல் வெட்டி கடத்தியவர்களின் மீது கிரிமினல் வழக்கு பதிய வேண்டுமெனவும், பேரூராட்சியின் நலன் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பணிவுடன் வேண்டுகிறன் என 12.02.24 அன்று புகார் அளித்தேன். அதற்காக நடவடிக்கை எடுக்க 23.04.2024 அன்று நாகர்கோவில் உதவி பேரூராட்சி இயக்குநரகத்திலிருந்து குறிப்பாணை வந்தது. ஆனால் மரம் இதுவரையிலும் கண்டுபிடிக்கவில்லை மற்றும் ஏலமும் நடைபெறவில்லை. இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து சம்பந்தபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன்

வேண்டுகிறேன். மரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளதாக தெரிவிக்கிறார்கள். ஆனால் அங்கு மரம் இல்லை என புகார் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

இராஜேஸ்வரி, செயல் அலுவலராகிய நான், பளுகல் பேரூராட்சியில் 28.08.2024 முதல் பணிபுரிந்து வருகிறேன். பலாமரம் வெட்டப்பட்ட காலத்தில் இப்பேரூராட்சியில் நான் பணிபுரியாததால் இப்புகார் மனுவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரத்தினை உரிய கோப்பின் அடிப்படையில் எனது தன்னிலை விளக்கத்தினை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட பளுகல் கிராமம் புல எண்.126/10/2ல் உள்ள ஆலத்துவிளை புறம்போக்கு பகுதியில் நன்றாக நின்ற சுமார் ரூ.2.50 இலட்சம் மதிப்புள்ள பலாமரத்தை தலைவர் மற்றும் துணைத் தலைவர் வெட்டி கடத்தியுள்ளதாக மனுதாரரிடமிருந்து 27.02.2024 நாளிட்டு வரப்பெற்ற புகாரின் பேரில் பளுகல் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்திலிருந்து 27.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் பளுகல் முதல்நிலை பேரூராட்சி மன்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் அவர்களிடம் விளக்கம் அளிக்க கோரப்பட்டது.

பளுகல் முதல்நிலை பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் பளுகல் முதல்நிலை பேரூராட்சி துணைத் தலைவர் அவர்களின் 26.03.2024 நாளிட்ட கடிதங்களில் பளுகல் பேரூராட்சிக்குட்பட்ட பளுகல் கிராமம் புல எண்.126/10/2ல் உள்ள புறம்போக்கு பகுதியில் நின்ற புளியமரம் 01.10.2023 அன்று மாலையில் பெய்த கனமழையில் முறிந்து விழுந்து திருமதி. சத்தியபாமா என்பவரின் வீடு சேதமடைந்தது. எனவே மேற்படி புளியமரம் மற்றும் இயற்கை இடர்பாடினால் மேற்கொண்டு ஏற்படும் விபத்துக்களை தவிர்க்கும் வண்ணம் அதன் அருகாமையில் ஆபத்தான நிலையில் நின்ற பலாமரம் ஆகியவற்றை 02.10.2023 அன்று கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், பேரூராட்சி செயல் அலுவலர், காவல் துறையினர், பளுகல் மின்சார வாரியத்தின் அதிகாரிகள், வார்டு உறுப்பினர், பளுகல் பேரூராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர் மற்றும் அங்குள்ள ஊர் பொதுமக்கள் முன்னிலையில் வெட்டி அப்புறப்படுத்தி ஏலம் விடுவதற்கென வருவாய் துறையினரால் விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்க எடுத்து செல்லப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 02.11.2024 நாளிட்ட குறிப்பாணையின்படி மேற்படி புகார் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவரம் தெரிவிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பளுகல் பேரூராட்சியின் 17.05.2024, 11.12.2024 மற்றும் 03.01.2025 நாளிட்ட கடிதங்களின் மூலம் விளவங்கோடு வட்டாட்சியருக்கு புகாரில் தெரிவிக்கப்பட்ட மரத்தின் தற்போதைய நிலை குறித்து கோரப்பட்டது.

விளவங்கோடு வட்டாட்சியர் தனது 03.01.2025 நாளிட்ட கடிதத்தில் மேற்படி பளுகல் கிராமம் புல எண்.126/10/2ல் உள்ள ஆலத்துவிளை நத்தம் புறம்போக்கு பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதம் நின்ற புளியமரம் மற்றும் பலாமரம் 02.10.2023 அன்று வெட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அவர்களிடம் அறிக்கை அனுப்பப்பட்டு, குறுமவிலை பெற்று 10.12.2024 அன்று ரூ.17800/-க்கு ஏலம் விடப்பட்டு ஏலத் தொகை அரசு கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 06.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. R.R. ஹரிகுமார் என்பவர் 06.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சிக்கு சொந்தமான ஆலத்துவிளை புறம் போக்கு நிலத்தில் புளியமரம் ஒன்று கனமழை காரணமாக விழுந்துவிட்டது. இதை காரணமாக கொண்டு இந்நிலத்தில் 35 அடி உயரம் மற்றும் 14 அடி விட்டம் கொண்ட சுமார் ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டிலான நன்றாக நின்ற பலாமரத்தை பளுகல் பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் சேர்ந்து வெட்டி கடத்தியுள்ளனர். இதுகுறித்து, கடந்த 10 மாத காலமாக பேரூராட்சியில் புகார் அளிக்கப்பட்டதில் மேற்படி பலா மரம் தாலுக்கா அலுவலகத்தில் உள்ளது என தெரிவித்தனர். ஆனால் அந்த மரம் அங்கு காணவில்லை. இந்நிலையில், மேற்படி பலா மரத்தை ஏலம் விட்டதாக பொய்யாக வேறொரு மரத்தை சுமார் ரூ.16,000 மதிப்பீட்டில் ஏலம் விடப்பட்டதாக தெரிய வருகிறது.

இந்நிலையில், பளுகல் பேரூராட்சியில் மேற்காணும் பலா மரம் குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளேன் (வழக்கு எண். WP (MD) No. 96290/2024).வழக்கு நிலுவையில் உள்ளது.

எனது 13.08.2024 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள புகாரினை தவிர பளுகல் முதல்நிலை பேரூராட்சி மன்ற தலைவரால் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு உரிய சொத்து வரி விதிக்காமல் மிகக் குறைந்த அளவில் சொத்து வரி நிர்ணயம் செய்துள்ளனர். இதனால் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே விலை மதிப்பு மிக்க பலாமரத்தினை வெட்டி கடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரான திருமதி. க. ராஜேஸ்வரி என்பவர் 06.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:-

- விளவங்கோடு வட்டம், பளுகல் கிராமம், கிராமம் புல எண்.126/10ல் 0.21.0 ஹெக்டேர் நிலம் கிராம ஆவணங்களின்படி நத்தம் புறம்போக்கு (வருவாய்த் துறை) என உள்ளது. மேற்படி நிலத்தில் நின்ற புளியமரம் ஒன்று 01.10.2023 அன்று பெய்த கனமழை காரணமாக

முறிந்து விழுந்து திருமதி. சத்தியபாமா என்பவரின் வீடு சேதமடைந்தது. எனவே மேற்காணும் விழுந்த புளியமரம் மற்றும் அதன் அருகில் ஆபத்தான நிலையில் நின்ற பலாமரம் ஆகியவற்றை 02.10.2023 அன்று வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறையினர், பளுகல் மின்சார வாரிய அதிகாரிகள், வார்டு உறுப்பினர், பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அங்குள்ள பொது மக்களின் முன்னிலையில் வெட்டி அப்புறப்படுத்தி ஏலம் விடும் வகையில் விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக எடுத்து வைக்கப்பட்டது.

➢ மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடமானது வருவாய்த் துறையை சார்ந்தது என்பதால், விளவங்கோடு வட்டாட்சியரிடம் அறிக்கை கோரப்பட்டது. இது தொடர்பாக விளவங்கோடு வட்டாட்சியரின் 3.1.2025 நாளிட்ட அறிக்கையில், மேற்காணும் மரத்துண்டுகளின் குறுமவிலை ரூ.15,000/– என நிர்ணயம் செய்து பொது ஏலம் விடுமாறு பத்மநாபபுரம் சார் ஆட்சியரின் 17.11.2023 நாளிட்ட செயல்முறை ஆணை வெளியிடப்பட்டது. இதனடிப்படையில் 25.7.2024 முதல் பல முறை ஏலம் நடத்தியும், விலை அதிகம் என்பதால் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் 10.12.2024 அன்று மரத்துண்டுகள் ரூ.15,100 மற்றும் ஜி.எஸ்.டி ரூ 2700 ஆகமொத்தம் 17,800 என விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏலம் விடப்பட்டு 10.12.2024 அன்று அத்தொகை அரசு கணக்கில் செலுத்தப்பட்டது என விளவங்கோடு வட்டாட்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

➢ மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பேரூராட்சி மன்ற தலைவரின் கட்டடத்திற்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து பேரூராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்பதனை இம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு அவரது வாக்குமூலம், பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. R.R. ஹரிகுமார் என்பவர் தனது 13.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சிக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் வளர்ந்து நின்ற ரூ.2.50 இலட்சம் பெறுமான பலா மரத்தினை பளுகல் முதல்நிலை பேரூராட்சி மன்றத் தலைவரும் மற்றும் துணைத் தலைவரும் சேர்ந்து வெட்டி மரத்தினை கடத்தியுள்ளதாக புகார் தெரிவித்து, இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கு காரணமான சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பலாமரம் இருந்த இடமான விளவங்கோடு வட்டம் பளுகல் கிராம புல எண்.126/10ல் 0.21.0. ஹெக்டேர் நிலம் கிராம ஆவணங்களின்படி நத்தம் புறம்போக்கு வகைப்பாட்டில் வருவாய்த் துறையை சாாந்தது எனவும், மேற்படி நிலத்தில் இருந்த புளியமரம் ஒன்று 01.10.2023 அன்று கனமழை காரணமாக முறிந்து விழுந்து வீடு சேதமடைந்த நிலையில் அதன் அருகில் பழுதடைந்த நிலையில் இருந்த பலாமரத்துடன் புளிய மரத்தையும் 02.10.2023 அன்று வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறையினர், மின்வாரிய அதிகாரிகள், வார்டு உறுப்பினர், பேரூராட்சி மன்றத் தலைவர் துணைத் தலைவர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் முன்னிலையில் வெட்டி அப்புறப்படுத்தி அதனை ஏலம் விடும் வகையில் விளவங்கோடு

வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டதாக செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்கண்ட மரத் துண்டுகளின் குறுமவிலை ரூ.15,000 என பத்மநாபபுரம் சார் ஆட்சியரின் 17.11.2023 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி நிர்ணயம் செய்து ஏலம் விடுமாறு ஆணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் 10.12.2024 அன்று மரத் துண்டுகள் ரூ.15,100 மற்றும் GST ரூ.2700 என ஆகமொத்தம் ரூ.17,800 தொகைக்கு ஏலம் விடப்பட்டு 10.12.2024 அன்று அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக விளவங்கோடு வட்டாட்சியரின் 13.01.2025 நாளிடப்பட்ட அறிக்கையின் மூலம் அறிய வருகிறது.

இதற்கிடையில் மனுதாரர் பலா மரத்திற்கு பதில் வேறொரு மரம் ஏலம் விடப்பட்டதாகவும், வெட்டிய பலாமரம் குறித்து பளுகல் பேரூராட்சியில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் இதுகுறித்து மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்துள்ளதாகவும் அவ்வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதன் மூலம் அறிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரர் திரு. R.R. ஹரிகுமார் என்பவர் தனது 27.02.2024 நாளிட்ட மனுவில் பளுகல் முதல்நிலை பேரூராட்சிக்கு சொந்தமான நிலத்தில் பலாமரம் வெட்டப்பட்டது குறித்து பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகாராக தெரிவித்திருந்தார்.

அப்புகார் மனு மீது பேரூராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் மனுதாரர் மாண்பமை மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மாண்பமை உயர்நீதிமன்றம் 03.01.2025 நாளிட்ட ( W.P.(MD) No.31513 of 2024 ) ஆணையில் மனுதாரர் திரு. R.R. ஹரிகுமார் என்பவரின் 27.02.2024 நாளிட்ட மனு குறித்து உரிய விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 4 வாரத்திற்குள் விவரத்தினை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஆணையிட்டதின் அடிப்படையில், விளவங்கோடு தாலுகா வருவாய் வட்டாட்சியரின் கடிதத்தின்படி மேற்படி பளுகல் கிராமம் புல எண்.126/10/2ல் உள்ள ஆலத்துவிளை நத்தம் புறம்போக்கு பகுதியில் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதம் நின்ற புளியமரம் மற்றும் பலாமரம் 02.10.2023 அன்று வெட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அவர்களிடம் அறிக்கை அனுப்பப்பட்டும் குறுமவிலை பெற்று 10.12.2024 அன்று ரூ.17,800/க்கு ஏலம் விடப்பட்டு ஏலத்தொகை அரசு கணக்கிற்கு செலுத்தப்பட்டுள்ளது என்கின்ற அறிக்கையினை மாண்பமை மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்ற பதிவாளருக்கு 06.02.2025 நாளிட்ட அறிக்கையின் மூலம் பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளதை ஆவணத்தின் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 13.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பளுகல் முதல்நிலை பேரூராட்சிக்கு சொந்தமான பலாமரத்தை முறைகேடாக வெட்டப்பட்டது தொடர்பாக, ஏற்கனவே மனுதாரரால் பேரூராட்சியில் சமர்ப்பித்த 27.02.2024 நாளிட்ட மனுவினை உரிய நடவடிக்கை மேற்கொள்ளாததால், மனுதாரர் மாண்பமை மதுரைக்கிளை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கில் வழங்கப்பட்ட 03.01.2025 நாளிட்ட ஆணை மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பளுகல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் திரு. R.R. ஹரிகுமார் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 13.08.2024 நாளிட்ட முறையீட்டு மனு மீதான தொடர்

நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மே திங்கள் 12ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R.R. ஹரிகுமார்,
1/36, மயூரம் புரவூர், பளுகல் முதல்நிலை பேரூராட்சி,
மணிவிளை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
பளுகல் முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

.3. பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/5/25

செயலாளர்

14/5/25